Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 224 | உள்ளூர் - 12.08.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 224 | வெளியூர் - 13.08.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



ஏழரை சனியா? அதிர்ஷ்ட காலமா!

லஞ்சம் கேட்டால்... 78717 23000!

தீவிரமடையும் பருவமழை!

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!

## ‘வந்தே மாதரம்’ மசோதாவுக்கு ஜனாதிபதி ஒப்புதல்: அவமதித்தால் 3 ஆண்டு சிறை தண்டனை!




புதுடெல்லி, ஆக. 12–
நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ‘வந்தே மாதரம்’ பாட லுக்கு சட்ட பாதுகாப்பு அளிக்கும் மசோதாவுக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்தார். அந்த பாடலை அவமதிப்பவர்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

தேசிய கவுரவ சின்னங்கள் அவமதிப்பு தடுப்பு சட்டம், தேசிய கீதத்துக்கு (ஜன கண மன) சட்ட பாதுகாப்பு அளித்து வருகிறது. தேசிய கீதம் பாடுவதை உள்நோக்கத்துடன் தடுத்தாலோ, கூட்டத்தில் பாடும்போது இடையூறு விளைவித்தாலோ அது குற்றமாக கருதப்படும். அதற்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படும். 2–வது அல்லது அடுத்தடுத்த குற்ற நிரூபணங்களுக்கு குறைந்தபட்சம் ஓராண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும். இதற்கிடையே, ‘வந்தே மாதரம்’ என்ற தேசிய பாடலுக்கும் தேசிய கீதத்துக்கு சமமான சட்ட பாதுகாப்பு அளிப்பதற்காக தேசிய கவுரவ சின்னங்கள் அவமதிப்பு தடுப்பு திருத்த மசோதாவை மத்திய அரசு உருவாக்கியது. அந்த மசோதா, கடந்த மாதம் 29–ந் தேதி நாடாளுமன்ற மாநிலங்களவையிலும், 30–ந் தேதி மக்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து, ஜனாதிபதி ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில், ‘வந்தே மாதரம்’ மசோதாவுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். அதன் மூலம், அம்மசோதா, சட்ட வடிவம் பெற்றுள்ளது.

இதன்படி, வந்தே மாதரம் பாடுவதை உள்நோக்கத்துடன் தடுத்தாலோ, அப்பாடலை கூட்டத்தில் பாடும்போது இடையூறு விளைவித்தாலோ 3 ஆண்டுகள்வரை சிறை தண்டனை அல் லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். இம்மாதம் 15–ந் தேதி, டெல்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி தேசியக் கொடி ஏற்றும்போது முதல்முறையாக ‘வந்தே மாதரம்’ பாடல் பாடப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்கனவே கூறியுள்ளது. கடந்த ஜனவரி மாதம் மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட உத்தரவில், தேசிய கீதமும், தேசிய பாடலும் பாடப்படும் அரசு நிகழ்ச்சிகளில், முதலில், தேசிய பாடலான ‘வந்தே மாதரம்’ பாடலின் அனைத்து 6 சரணங்களும் பாடப்பட வேண்டும் அல்லது இசைக்கப்பட வேண்டும். அப்பாடலை பாடும்போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என்றும், அனைத்து பள்ளிகளிலும் தேசிய பாடல் பாடுவதுடன் அன்றைய பணிகளை தொடங்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## கிரெடிட் ஸ்கோர் இல்லையா?

# கவலை வேண்டாம்! வங்கி கடனில் ஏஐ புரட்சி?

## வங்கிகளுக்கு வந்தது அதிரடி மாற்றம்!!



மும்பை, ஆக. 12–
வங்கிகளில் கடன் வழங்கும் முறையில் செயற்கை நுண்ணறிவு (AI) மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

தற்போது ஒருவரின் கிரெடிட் ஸ்கோர், ஏற்கனவே பெற்ற கடன்கள் மற்றும் கிரெடிட் கார்டு பயன்பாடு போன்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டே கடன் வழங்குவது குறித்து வங்கிகள் முடிவு செய்கின்றன. இதனால் இதுவரை கடன் பெறாதவர்களுக்கு கிரெடிட் வரலாறு இல்லாததால் கடன் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது.

இந்நிலையில், ஜிஎஸ்டி தாக்கல் விவரங்கள், பணப்புழக்கம், கட்டணங்களை முறையாக செலுத்திய வரலாறு உள்ளிட்ட மாற்றுத் தரவுகளை AI மூலம் ஆய்வு செய்து, கடன் பெறத் தகுதியானவர்களை அடையாளம் காண முடியும் என ஆளுநர் கூறினார். இதன் மூலம் இதுவரை வங்கி சேவைகளைப் பெறாதவர்களுக்கும் கடன் வாய்ப்பு அதிகரிக்கலாம். வங்கிகள் AI–ஐ தனிப்பட்ட திட்டமாக அல்லாமல், நீண்டகால முக்கிய திட்டமாக அணுக வேண்டும் என்றும், வங்கிகளின் நிர்வாகக் குழு இதனை வழிநடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். AI மூலம் வாடிக்கையாளர்களுக்கு சரியான நிதி தயாரிப்புகளை பரிந்துரைத்தல், மோசடிகளை நிகழ்நேரத்தில் கண்டறிதல், புகார்களை விரைவாகத் தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் மேம்படுத்த முடியும். அதே நேரத்தில் தரவுப் பாதுகாப்பு, சைபர் அச்சுறுத்தல்கள் மற்றும் AI அல்காரிதம்களில் ஏற்படும் பாரபட்சம் போன்ற பிரச்னைகளிலும் வங்கிகள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என ரிசர்வ் வங்கி ஆளுநர் எச்சரித்துள்ளார்.

## ரத்தக்களறியான பங்குச்சந்தை..!!




புதுடெல்லி, ஆக. 12–
டாடா சன்ஸ் தலைவர் என். சந்திரசேகரன், பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இதையடுத்து டாடா குழும நிறுவனங்களின் பங்குகள் கடும் சரிவை சந்தித்தன.

டிசிஎஸ் பங்கு 4%க்கும் மேல், டாடா மோட்டார்ஸ் 4% வரை சரிந்தன. டாடா ஸ்டீல், டாடா கன்ஸூமர், டாடா பவர், டிரெண்ட் உள்ளிட்ட பங்குகளும் வீழ்ச்சி கண்டன.

இதன் தாக்கமாக சென்செக்ஸ் 77,545 புள்ளிகளுக்கும், நிஃப்டி 24,278 புள்ளிகளுக்கும் சரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2017–ல் டாடா சன்ஸ் தலைவராக பொறுப்பேற்ற சந்திரசேகரன், 2027 பிப்ரவரி வரை பதவியில் தொடர்வார் என கூறப்படுகிறது. ஆகஸ்ட் 18–ல் டாடா குழுமத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற உள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## தொகுதி மறுவரையறை தனித்தீர்மானம் நிறைவேற்றம்



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நாடாளுமன்ற மக்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 543 என்ற நிலையிலேயே நிரந்தரமாக்க வேண்டும் என்றும், தற்போதுள்ள மக்களவை உறுப்பினர்களின் இடங்களின் எண்ணிக்கையை மாநிலங்களுக்கிடையே அதாவது விகிதாச்சார பிரதிநிதித்துவம் தற்போதுள்ள அளவிலேயே நிரந்தரமாக்க வேண்டும் என்றும், வரவிருக்கும் மக்களவை மற்றும் சட்டமன்றப் பொதுத்தேர்தல்களிலும் மூன்றில் ஒரு பங்கு தொகுதி ஒதுக்கீட்டுப் பலனைப் பெண்கள் பெறுவதை உறுதிசெய்ய வேண்டும் என்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார். பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. அதி.முக பாஜக.பாமக ஆகிய கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் திமுக காங்கரசின் ஆதரவுடன் நிறைவேறியது.

## PF பணம் எடுக்க புதிய விதி!



புதுடெல்லி, ஆக. 12–
வேலையை விட்டு விலகிய பிறகு முழு PF தொகையை எடுக்க 12 மாதங்கள் காத்திருக்க வேண்டும் என மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. EPS ஓய்வூதியத் தொகையை எடுக்க 36 மாதங்கள் காத்திருப்பு காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், அவசரத் தேவைகளுக்காக PF கணக்கில் உள்ள தொகையில் 75% வரை ஆண்டுக்கு 2 முறைஎடுத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வீடு கட்டுதல், மருத்துவச் செலவு, கல்வி மற்றும் வேலையின்மை போன்ற தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும், EPFO 3.0 திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் PF பணத்தை UPI, ATM உள்ளிட்ட டிஜிட்டல் முறைகளில் விரைவாகப் பெறும் வசதி கொண்டு வரப்பட உள்ளது. ஓய்வுக்கால நிதிப் பாதுகாப்பை உறுதி செய்வதே இந்த மாற்றங்களின் நோக்கம் என அரசு தெரிவித்துள்ளது.

## எம்எல்ஏ தொகுதி நிதி ரூ.3.54 கோடியாக உயர்வு!




சென்னை, ஆக. 12–
சட்டப்பேரவை உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுப் பணிகளுக்காக தமிழக அரசு ரூ.828.36 கோடிநிதியை விடுவித்து அரசாணை வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் வழங்கப்பட்டு வந்த ரூ.3 கோடி நிதி, ரூ.3.54 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

தொகுதி மேம்பாட்டுப் பணிகளுக்கான 18% ஜிஎஸ்டி செலவையும் அரசே ஏற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியை தற்போதைய எம்எல்ஏக்கள் மேற்கொள்ளும் புதிய பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், முந்தைய பணிகளுக்கு செலவிடக்கூடாது என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

## ஆடி அமாவாசை: முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்த மக்கள்!



ராமேஸ்வரம், ஆக. 12–
ஆடி அமாவாசையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் ஏராளமானோர் புனித நீர்நிலைகளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து வழிபட்டனர்.

ராமேஸ்வரம் அக்னி தீர்த்தம், திருவையாறு புஷ்ய மண்டப படித்துறை, ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், திருச்செந்தூர் கடற்கரை, பவானி கூடுதுறை, திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரை, கன்னியாகுமரி, கோவை உள்ளிட்ட இடங்களில் மக்கள் திரண்டனர். முன்னோர்களை நினைவுகூர்ந்து தர்ப்பணம் செய்வதுடன், வீடுகளில் முன்னோர் படங்களுக்கு மாலை அணிவித்து தீபம் ஏற்றி, அவர்கள் விரும்பிய உணவுகளைப் படைத்து வழிபடுவது வழக்கம். இதனால் முன்னோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும் என்பது ஐதிகம்.

## விண்வெளியில் இந்தியாவுக்கு ரஷ்ய வீரர்கள் வாழ்த்து!




புதுடெல்லி, ஆக. 12–
சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள ரஷ்ய விண்வெளி வீரர்கள், இந்திய தேசியக் கொடியை ஏந்தி 80–வது சுதந்திர தின வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இந்தியர்களுக்கு அமைதி, வளம் கிடைக்க வாழ்த்திய அவர்கள், இந்தியாரஷ்யா நட்பு நீடிக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கு யூரி ககாரின் மேற்கொண்ட 1961–ம் ஆண்டு பயணம் இரு நாடுகளின் நட்புறவை வலுப்படுத்தியதாகக் குறிப்பிட்ட அவர்கள், “இந்தியா உண்மையான நண்பர்கள் வாழும் நாடு” என நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

தலையங்கம்

மதுரை மணி

புதன்கிழமை 12.08.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆடி மாதம் 27-ம் தேதி

## E20 வெட்ரோலுக்கு மக்கள் 'நோ'!



இந்தியாவில் E20 பெட்ரோல் பயன்பாடு தொடர்பான அச்சம் அதிகரித்து வரும் நிலையில், வாகனங்களை வாங்குவதில் மக்கள் தங்கள் தேர்வை மாற்றத் தொடங்கியுள்ளதாக ஜூலை மாத விற்பனை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. FADA வெளியிட்ட தரவுகளின்படி, ஜூலை மாதத்தில் இந்தியாவில் 25.91 லட்சம் வாகனங்கள் விற்பனையாகியுள்ளன. இது கடந்த ஆண்டை விட 25.89 சதவீதம் அதிகமாகும்.

முதல் முறையாக ஜூலை மாதத்தில் 4 லட்சத்துக்கும் அதிகமான பயணிகள் வாகனங்கள் விற்பனையாகியுள்ளன. ஆனால், இதில் பெட்ரோல்எத்தனால் வாகனங்களின் பங்கு கடந்த ஆண்டின் 47.62 சதவீதத்தில் இருந்து 41.68 சதவீதமாக குறைந்துள்ளது. அதே நேரத்தில், சிஎன்ஜி, ஹைப்ரிட் மற்றும் எலக்ட்ரிக் உள்ளிட்ட மாற்று எரிபொருள் வாகனங்களின் பங்கு 40.59 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இதனால் E20 பெட்ரோல் விவகாரம் மக்களின் வாகனத் தேர்விலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது. டீசல் வாகனங்களின் பங்கு 1617 சதவீத அளவில் தொடர்ந்து நிலைத்துள்ளது.

## புதிய யூடியூபர்களுக்கு புதிய விதிகள்!




புதுடெல்லி, ஆக. 12–

யூடியூப் நிறுவனம் தனது பார்ட்னர் புரோகிராம் தகுதி விதிகளில் முக்கிய மாற்றங்களை கொண்டுவர திட்டமிட்டுள்ளது. இந்த புதிய விதிகள் 2027 பிப்ரவரி 1 முதல் அமலுக்கு வர உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரங்கள் மற்றும் யூடியூப் பிரீமியம் மூலம் வருமானம் பெற விரும்பும் படைப்பாளிகளுக்கு, நீண்டநேர வீடியோக்களுக்கான பார்வை நேர இலக்கு 4,000 மணி நேரத்தில் இருந்து 8,000 மணி நேரமாக உயர்த்தப்பட உள்ளது. அதேபோல், ஷாட்ஸ் வீடியோக்கள் மூலம் வருமானம் பெறுவதற்கான 90 நாள் பார்வை இலக்கு 10 மில்லியனில் இருந்து 20 மில்லியனாக அதிகரிக்கப்பட உள்ளது. எனினும், 1,000 சந்தாதாரர்கள் என்ற அடிப்படை விதியில் மாற்றம் இல்லை. இந்த கடுமையான இலக்குகளுக்கு இடையிலும், சிறிய சேனல்களுக்கு யூடியூப் ஷாப்பிங், பிராண்ட் கூட்டாண்மை மற்றும் கிரியேட்டர் வெகுமதிகள் போன்ற மாற்று வருமான வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளன. 500 சந்தாதாரர்கள், 3 வீடியோக்கள் மற்றும் குறிப்பிட்ட பார்வை நேரம் அல்லது ஷாட்ஸ் பார்வைகளை கொண்ட சேனல்களுக்கு ரசிகர்களின் நிதி ஆதரவு பெறும் வசதியில் மாற்றம் இல்லை.

## தமிழ்நாட்டிற்கு வரும் முக்கிய பிரமுகர்கள் வரவேற்பு செலவுக்கு கூடுதலாக ரூ.6 கோடி ஒதுக்கீடு!




சென்னை, ஆக. 12–

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் நாட்டின் மிக முக்கியப் பிரமுகர்கள் (விவிஐபிக்கள்) மற்றும் உயர்மட்ட குழுவினருக்கான அரசு முறை வரவேற்பு மற்றும் உபசரிப்புகளுக்காக கூடுதலாக ரூ.6,85,00,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர் கே.எஸ். பழனிசாமி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள், ஒன்றிய அரசு மற்றும் பிற மாநிலங்களின் மூத்த அதிகாரிகள், வெளிநாட்டு தூதர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மாவட்டங்களுக்கு வருகை தரும் போது, அவர்களுக்கான தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட உபசரிப்பு வசதிகளை தடையின்றி வழங்கவும், செலவினக் கோரிக்கைகளை விரைவாகச் தீர்க்கவும் இது பயன்படுத்தப்படும்.

முதல்வர் மற்றும் மாநில அமைச்சர்களின் வருகைக்கான செலவினங்கள் இதில் சேர்க்கப்படவில்லை. 2026–2027 நிதியாண்டிற்காக அனுமதிக்கப்பட்டுள்ள இந்த நிதி, மாவட்ட கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்படும். பிரமுகர்களின் வருகையின் போது ஆகும் உண்மையான செலவினங்களின் அடிப்படையில், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு இந்த நிதியைப் பகிர்ந்தளித்து செலவிட கலெக்டர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## சுதந்திர தின விழா - மதுரை விமான நிலையத்துக்கு 5 அடுக்கு பாதுகாப்பு!




மதுரை, ஆக. 12–

நாடு முழுவதும் வருகிற 15–ந்தேதி (சனிக்கிழமை) சுதந்திர தின விழா, கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இதை முன்னிட்டு மத்திய அரசின் அறிவுறுத்தலின்பேரில் நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்கள், ரெயில் நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளன. மதுரை விமான நிலையத்தில் முதல் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அதன்படி, மதுரை விமான நிலைய உள்வளாகம், விமான நிலைய ஓடுபாதை, விமான நிலைய சுற்றுப்புற கண்காணிப்பு கோபுரங்கள், விமான நிலைய வெளிவளாகம், வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட இடங்களில் மத்திய தொழில்பாதுகாப்பு படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## சுங்கச்சாவடிகளில் உள்ளூர்வாசிகளுக்கு கட்டணமில்லா பயணமா?




சென்னை, ஆக. 12–

சுங்கச்சாவடிகளின் அருகாமையில் உள்ளவர்கள் அடையாள அட்டையை காண்பித்து கட்டணம் இன்றி பயணிக்கலாமா? என்பது குறித்து நெடுஞ்சாலை ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தனியார் பங்களிப்புடன் சாலைகளை சீரமைத்து, அதற்கான கட்டணத்தை வாகன ஓட்டிகளிடம் இருந்து சுங்கச்சாவடி மூலமாக வசூலித்து வருகிறது. நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகள் உள்ளன. இதில் தமிழகத்தில் மட்டும் 78 சுங்கச்சாவடிகள் இருக்கின்றன. இந்த சுங்கச்சாவடிகளை கடந்து செல்லும் கார், ஜீப், ஆட்டோ, பஸ், லாரி, டெம்போ உள்பட பல்வேறு வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்தநிலையில் சுங்கச்சாவடிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் உள்ள வாகன ஓட்டிகள் தங்களது அடையாள அட்டையை காண்பித்து கட்டணம் இன்றி கடந்து செல்லலாம் என்று ஒரு தகவல் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர். சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வரும் அந்த தகவலுக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

அதில் "தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில், அடையாள அட்டையை காண்பித்தால் உள்ளூர்வாசிகள் கட்டணம் இன்றி பயணிக்கலாம் என்பது தவறான கருத்து. உள்ளூர்வாசிகளுக்கு கட்டணமில்லா பயணம் கிடையாது. ஆனால் சுங்கச்சாவடிக்கு அருகில் வசிக்கும் உள்ளூர் மக்களுக்கு கட்டண சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக உள்ளூர் மாதாந்திர பாஸ் முறை நடைமுறையில் உள்ளது.

சுங்கச்சாவடியைச் சுற்றி 20 கிலோமீட்டர் சுற்றளவில் வசிப்பவர்கள் மட்டுமே இந்த சலுகையைப் பெற தகுதியுடையவர்கள். குறிப்பிட்ட அந்த சுங்கச்சாவடிக்கென அறிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படியே இந்த பாஸ்கள் வழங்கப்படுகின்றன. எனவே, அடையாள அட்டையை காண்பித்து கட்டணமில்லாமல் செல்லலாம் என்று கருத வேண்டாம். சலுகை பெற விரும்புவோர் அந்த சுங்கச்சாவடியின் விதிகளைப் பின்பற்றி முறைப்படி உள்ளூர் மாதாந்திர பாஸை பெற வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரேஷன் கடை வேலை நேரம் மாற்றம்?- ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு!



சென்னை, ஆக. 12–

சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் ரேஷன் கடை வேலை நேரத்தை மாற்றம் செய்வது குறித்து ஆய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு ரேஷன் கடை பணியாளர் சங்கம் சார்பில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு கோரிக்கை மனு ஒன்று அளிக்கப்பட்டிருந்தது. அதில், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தற்போது ரேஷன் கடைகள் காலை 8.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், மீண்டும் பிற்பகல் 3 மணி முதல் மாலை 7 மணி வரையிலும் செயல்பட்டு வருகிறது. அதன்படி, மதிய இடைவேளை நேரம் நீட்டிக்கப்பட்டு, பணி நேரம் சுமார் 12 மணி நேரமாக உள்ளது. இதனால் பணியாளர்கள் மனச்சோர்வுக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நுகர்பொருள் வாணிபக் கழக குடோன்களுக்கு வெள்ளிக்கிழமை வேலை நாளாகவும், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளாகவும் உள்ளது. ஆனால், ரேஷன் கடை பணியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறையாகவும், ஞாயிற்றுக்கிழமை வேலை நாளாகவும் இருப்பதால், விடுமுறை நாட்கள் யாருக்கும் பயனுள்ளதாக இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ரேஷன் கடை வேலை நேரத்தை காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரையிலும், பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் மாற்றி அமைக்க வேண்டும் என்றும் மாதத்தின் முதல் 2 வெள்ளிக்கிழமைகளை வேலை நாட்களாகவும், முதல் 2 ஞாயிற்றுக்கிழமைகளை விடுமுறை நாட்களாகவும் அறிவிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கை மனுவின்படி, மாற்றங்களைச் செயல்படுத்தினால் கள அளவில் ஏற்படும் சாதக, பாதகங்களை ஆய்வு செய்து, அது குறித்து அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட துணைப்பதிவாளர்களுக்கு பொது வினியோகத்திட்டத்தின் இணைப்பதிவாளர் உத்தரவிட்டுள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் சென்னை, மாநிலக் கல்லூரி அரங்கில் "போதைப்பொருள்கள் இல்லாத தமிழ்நாடு – DRUG FREE TAMIL NADU" – மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மற்றும் விருதுகள் வழங்கும் விழா காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற நிகழ்ச்சியில் ரங்கம்பாளையம் ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி முன்னிலையில் கல்லூரி மாணவ மாணவியர்கள் உட்பட அனைவரும் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி கிரண் ஸ்ருதி, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.

## என்ஜின் கோளாறு: சென்னை விமான நிலையத்தில் இண்டிகோ விமானம் அவசரமாக தரையிறக்கம்!

சென்னை, ஆக. 12–


கொல்கத்தாவில் இருந்து சென்னைக்கு 224 பயணிகளுடன் இண்டிகோ நிறுவனத்தின் 6இ–723 விமானம் வந்து கொண்டிருந்தது. இரவு 11.30 மணியளவில் சென்னை விமான நிலையத்தில் தரையிறங்க வேண்டியிருந்த நிலையில், விமானத்தை தரையிறக்க விமானி தயாரானபோது இடதுபுற என்ஜின் செயலிழந்திருப்பதை கண்டறிந்தார்.இதையடுத்து விமானி உடனடியாக விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து சென்னை விமான நிலைய அதிகாரிகள் அவசரகால பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

விமான நிலையத்தில் முழு அவசரநிலை அறிவிக்கப்பட்டது. இதற்கிடையே, விமானம் இரவு 11.37 மணியளவில் ஓடுபாதை 25–ல் பாதுகாப்பாக தரையிறங்கியது. விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியதைத் தொடர்ந்து, இரவு 11.47 மணியளவில் முழு அவசரநிலை திரும்பப் பெறப்பட்டது. இதன் பின்னர் சென்னை விமான நிலையத்தின் வழக்கமான செயல்பாடுகள் எந்தவித பாதிப்புமின்றி தொடர்ந்து நடைபெற்றன.

விமானத்தின் என்ஜின் கோளாறுக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. விமானத்தில் என் ஜின் கோளாறு காரணமாக அவசர நிலை அறிவிக்கப்பட்டு விமானம் தரையிறக்கப்பட்டதால் சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.




தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் போதைப்பொருள் எதிர்ப்பு மன்றத்தின் சிறந்த செயல்பாட்டிற்காக மாநில அளவில் முதலிடம் பெற்ற திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரிக்கு வழங்கிய பரிசுத்தொகை, பாராட்டுச்சான்றிதழ் மற்றும் கோப்பையை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரேவிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். உடன் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் உள்ளார்.



## ஏழரை சனியா? அதிர்ஷ்ட காலமா!




ஏழரை சனி காலம் என்றாலே துன்பம், தடைகள், பிரச்சினைகள் தான் வரும் என்ற எண்ணம் பலரிடம் உள்ளது. ஆனால் ஜோதிட நம்பிக்கைகளின்படி, ஏழரை சனி அனைவருக்கும் ஒரே மாதிரியான பலன்களை வழங்குவதில்லை. சிலருக்கு இந்தக் காலகட்டம் வாழ்க்கையில் முக்கியமான மாற்றங்களையும், பதவி உயர்வையும், சமூகத்தில் மரியாதையையும் பெற்றுத் தரும் காலமாக அமையலாம்.

ஒரு ராசியில் சனி பகவான் சஞ்சரிக்கும் போது, அந்த ராசிக்கு முந்தைய ராசி, பிறகு வரும் ராசி மற்றும் சனி சஞ்சரிக்கும் ராசி என மூன்று ராசிகளுக்கும் சேர்த்து ஏழரை சனி காலம் எனக் குறிப்பிடப்படுகிறது. பொதுவாக இந்தக் காலத்தை நினைத்து பலரும் அச்சப்படுகின்றனர். ஆனால் சனி பகவான் ஒழுக்கம், பொறுமை, உழைப்பு, நேர்மை ஆகியவற்றை வலியுறுத்தும் கிரகமாக ஜோதிடத்தில் கருதப்படுகிறார்.

**மகரம், கும்பத்திற்கு சாதகமா?**

மகரம் மற்றும் கும்ப ராசிகளின் அதிபதியாக சனி கருதப்படுவதால், இந்த ராசியினருக்கு ஏழரை சனி காலத்தில் சில நேரங்களில் சாதகமான பலன்கள் கிடைக்கலாம் என ஜோதிடக் கருத்துகள் கூறுகின்றன. பணியில் நிலைத்தன்மை, பொறுப்புகள் அதிகரித்தல், பதவி உயர்வு, வருமான முன்னேற்றம் போன்ற வாய்ப்புகள் ஏற்படலாம்.

**ஒழுக்கம் இருந்தால் சனி அருள்!**

நேர்மையாகவும் நியாயமாகவும் நடப்பவர்கள், பிறருக்கு உதவுபவர்கள், பலவீனமானவர்களைத் துன்புறுத்தாதவர்கள், தங்களது கடமைகளை முறையாகச் செய்பவர்கள் ஆகியோருக்கு சனியின் காலம் நல்ல அனுபவங்களைத் தரக்கூடும் என நம்பப்படுகிறது.

**நேரத்தை மதிப்பவர்களுக்கு முன்னேற்றம்!**

காலத்தை வீணாக்காமல் திட்டமிட்டு செயல்படுவது, கொடுக்கப்பட்ட பணிகளை உரிய நேரத்தில் முடிப்பது, பொறுமையுடன் செயல்படுவது போன்ற குணங்கள் ஏழரை சனி காலத்திலும் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

எனவே ஏழரை சனி காலத்தைப் பார்த்து பயப்படுவதற்குப் பதிலாக, நேர்மை, உழைப்பு, பொறுமை, ஒழுக்கம் ஆகியவற்றை கடைப்பிடிப்பதே சிறந்த வழி. ஜோதிட நம்பிக்கைகளின்படி, சனி பகவான் தண்டிப்பவர் மட்டுமல்ல; சரியான பாதையில் நடப்பவர்களுக்கு உயர்வையும் மரியாதையையும் வழங்குபவராகவும் கருதப்படுகிறார்.

**குறிப்பு:** மேற்கண்டவை ஜோதிட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட கருத்துகள்.

## சினிமா துளிகள்..!

## அடையாளம் மாறும் சிவாஜியின் 'அன்னை இல்லம்'!




நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் நெருங்கிய தொடர்புடைய சென்னை கோபாலபுரத்தில் உள்ள 'அன்னை இல்லம்' தற்போது இடிக்கப்பட்டு, புதிய அபார்ட்மென்ட் கட்டுமானப் பணிகள் தொடங்கியுள்ளன.

சிவாஜி கணேசன் திரையுலகில் உச்சத்தில் இருந்த காலத்தில் கோபாலபுரம் பகுதியில் இந்த வீட்டை கட்டியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். ஒரே வளாகத்தில் நான்கு பிளாக்குகளாக அமைந்திருந்த இந்த வீட்டில் சிவாஜியின் குடும்பத்தினர் வசித்து வந்தனர். வார இறுதி நாட்களில் சிவாஜியும் இங்கு வந்து தங்கியதாக கூறப்படுகிறது.

சிவாஜி மறைவுக்குப் பிறகு சொத்து தொடர்பாக அவரது மகன்கள் ராம்குமார், பிரபு மற்றும் மகள்கள் சாந்தி, தேன்மொழி இடையே பிரச்னை ஏற்பட்டது. பின்னர் குடும்பத்தினரிடையே பேச்சுவார்த்தை மூலம் கோபாலபுரம் 'அன்னை இல்லம்' சாந்தி மற்றும் தேன்மொழி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில், இருவரும் கட்டுமான நிறுவனத்துடன் இணைந்து புதிய கட்டுமானத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர். இதையடுத்து பழைய கட்டடம் இடிக்கப்பட்டு, தற்போது புதிய அபார்ட்மென்ட் கட்டும் பணிகள் தொடங்கியுள்ளன. இந்த புதிய கட்டடம் தயாரான பிறகு சாந்தி மற்றும் தேன்மொழி இருவரும் அங்கேயே குடியேற உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் சிவாஜி குடும்பத்துடன் நீண்ட காலமாக தொடர்புடைய 'அன்னை இல்லம்' புதிய வடிவம் பெறுகிறது.

நலம் நலமறிய..!
மருத்துவ குறிப்புகள்

## தலையணை உறை சுத்தமாக இல்லையா? உடல்நலத்திலும் பாதிப்பு!




தினமும் பயன்படுத்தும் தலையணை உறையை பல நாட்கள் மாற்றாமல் இருப்பது பலரது வழக்கமாக உள்ளது. ஆனால் தூங்கும்போது உடலில் இருந்து வெளியேறும் வியர்வை, எண்ணெய், இறந்த சரும செல்கள், தூசி மற்றும் அழுக்குஆகியவை தலையணை உறையில் படிந்து சேரலாம்.

முகம் மற்றும் தலைமுடியுடன் நேரடியாக தொடர்பில் இருப்பதால், தலையணை உறை சுத்தமாக இருப்பது முக்கியம். தலைமுடியில் பயன்படுத்தும் எண்ணெய், கிரீம் உள்ளிட்ட பொருட்களும் உறையில் படிந்து அழுக்கை அதிகரிக்கலாம்.

நீண்ட நாட்கள் மாற்றாமல் பயன்படுத்தினால் தூசி மற்றும் நுண்ணுயிரிகள் சேர்ந்து, சிலருக்கு முகப்பரு, சரும எரிச்சல், ஒவ்வாமை போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

எனவே, பொதுவாக வாரத்திற்கு ஒருமுறை தலையணை உறையை மாற்றி சுத்தம் செய்வது நல்ல பழக்கம். அதிகமாக வியர்ப்பவர்கள் அல்லது எண்ணெய் பசை அதிகம் உள்ளவர்கள் அடிக்கடி மாற்றலாம்.

தலையணை உறை மட்டுமின்றி, தலையணையையும் அதன் வகைக்கு ஏற்ப அவ்வப்போது சுத்தம் செய்து பராமரிப்பது அவசியம்.

## தமிழகத்தின் பல்வேறு இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை!




சென்னை, ஆக. 12–

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை மற்றும் கோவை உள்பட 9 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை (NIA) அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில் 6 இடங்கள் மற்றும் மதுரையில் 1 இடம் உட்பட பல இடங்களில் இந்த சோதனை நடந்து வருகிறது. கடந்த 2024–ம் ஆண்டு அந்தமான் பகுதியில் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக இந்த சோதனை நடத்தப்படுகிறது. இந்த வழக்கில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கில் பிடிபட்ட 7 பேருடன் தொடர்பில் இருந்தவர்கள் வீடுகளில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

பர்மாவில் இருந்து செயல்படும் போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பில் உள்ளவர்களின் வீடுகளில் இந்த சோதனை நடத்தப்படுகிறது. மியான்மரில் இருந்து செயல்படும் போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பா? என அதிகாரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

## திமுக-பாஜக கூட்டணி உருவாகிறதா? - வானதி சீனிவாசன் பரபரப்பு பதில்!




கோவை, ஆக. 12–

கோவையில் பாஜனதா தேசிய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது நிருபர்கள், தி.மு.க.–பா.ஜனதா கூட்டணி உருவாகிறதா? என்று கேள்வி எழுப்பினர். அதற்கு மறுப்பு தெரிவிக்காத அவர், அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை. கூட்டணி உருவாகும்போது பார்ப்போம் என்று கூறினார்.

மேலும் அவர் கூறும்போது, சட்டம்–ஒழுங்கு இன்னும் மாற வில்லை. ஆட்சி அதிகாரத்தில் இருக்கையில் இருப்பவர்கள் மட்டும் மாறி உள்ளனர். பெண்களுக்கு. விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. தமிழக அரசு நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றால், சுப்ரீம் கோர்ட்டை நாடலாமே தவிர, நீட் தேர்வு ரத்து என்பது சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை மீறுவது போன்றது.

இந்த நீட்தேர்வில் உள்ள பிரச்சினைகளை மத்திய அரசு சரி செய்துள்ளது. த.வெ.க. அரசு தனி கமிட்டியை அமைத்து, கோவை, மதுரை பகுதிகளுக்கு தகுதியான திட்ட அறிக்கையை கொடுத்து மெட்ரோ ரெயில் வருவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தீவிரமடையும் பருவமழை!




சென்னை, ஆக. 12–


தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

தமிழக கடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை (Trough) நிலவுகிறது என்றும், இதன் காரணமாக இன்று (12–08–2026) மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் வடமேற்கு வங்கக்கடலில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்படி மேற்கு வங்கம்–வங்கதேச கடற்கரை அருகே வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வுபகுதி உருவாகியுள்ளது என்றும், காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெற்று வடமேற்கு திசையில் நகர வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. வங்கக்கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக வடக்கு, வடமேற்கு மாநிலங்கள் மற்றும் கடலோரப்பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## தமிழகம் முழுவதும் 56 லட்சம் ஸ்மார்ட் மீட்டர்கள் - புதிய டெண்டர் கோர மின் வாரியம் திட்டம்!




சென்னை, ஆக. 12–

தமிழகத்தில் வீடுகளை உள்ளடக்கிய மின் இணைப்பு களில், மின் பயன்பாட்டை கணக்கெடுக்க, மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. அந்த மீட்டரில் பதிவாகியுள்ள மின் பயன்பாட்டை, மின் வாரிய பணியாளர்கள், நேரில் சென்று கணக்கு எடுத்து வருகின்றனர். சிலர், நேரில் செல்லாமல் கணக்கெடுப்பதால், நுகர்வோருக்கு அதிக மின் கட்டணம் வருகிறது.

இதன் காரணமாக ஆளில்லாமல் கணக்கெடுக்க, 'ஸ்மார்ட்' மீட்டர் திட்டத்தை செயல்படுத்த, மின் வாரியம் முடிவு செய்தது. இந்த ஸ்மார்ட் மீட்டரில் தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டு, அலுவலக 'சர்வர்' உடன் இணைக்கப்படும். மின் பயன்பாடு கணக்கெடுக்க வேண்டிய தேதி வந்ததும், தானாகவே கணக்கெடுத்து, நுகர்வோரின் மொபைல் போன் எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் 20 ஆயிரம் கோடி ரூபாய் திட்ட செலவில், மாநிலம் முழுவதும், 3.04 கோடி மின் இணைப்புகளில், 'ஸ்மார்ட் 'மீட்டர் பொருத்தி, பராமரிக்கும் பணிக்கு 'டெண்டர்' கோரப்பட்டது. இந்த டெண்டரில், 50 நிறுவனங்கள் பங்கேற்றன. அவை வழங்கிய தொழில்நுட்ப புள்ளி திறக்கப்பட்ட நிலையில், அரசின் அனுமதி கிடைக்காததால், விலைப் புள்ளி திறக்கப்படாமல் இருந்தது. இதனிடையே ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், 'ஸ்மார்ட்' மீட்டர் டெண்டரில், எந்த முடிவும் எடுக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில், 'சென்னையில் அனைத்து நுகர்வோருக்கும், மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள, 50 லட்சம் தொழில் மற்றும் வணிக நுகர்வோருக்கும், 'ஸ்மார்ட்' மீட்டர் பொருத்தப்படும்' என, தமிழக பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. எனவே, கடந்த தி.மு.க., ஆட்சியில், 3 கோடி மின் இணைப்புகளில், ஸ்மார்ட் மீட்டர் பொருத்த கோரிய 'டெண்டர்' ரத்து செய்யப்பட உள்ளது. இது குறித்து, விரைவில் நடக்க உள்ள மின் வாரிய இயக்குநர்கள் குழு கூட்டத்தில், முடிவு எடுக்கப்பட உள்ளது.

ஒட்டு மொத்தமாக தமிழகம் முழுவதும் 56 லட்சம் 'ஸ்மார்ட்' மீட்டர் பொருத்த, மின் வாரியம் புதிதாக 'டெண்டர்' கோர ஆயத்தமாகி வருகிறது. முதல் கட்டமாக தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகளில், 1.25 லட்சம் 'ஸ்மார்ட்' மீட்டர்களை, மத்திய அரசின் மறுசீரமைக்கப்பட்ட மின் வினியோக திட்டத்தின் கீழ், மின் வாரியம் பொருத்த உள்ளது.

## திருச்சியில் நடந்த திருக்குறள் போட்டிகளில் 498 மாணவர்கள் பங்கேற்பு!



திருச்சி, ஆக. 12–

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், திருச்சி யில், அண்மையில் (9 ஆகஸ்ட் 2026) நடத்திய பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான திருக்குறள் சார்ந்த பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளில், 498 மாணவர்கள் பங்கேற்று சாதனை புரிந்தனர். இவ்வளவு அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பங்கேற்றது, இளம் தலைமுறையினரிடையே தமிழின் மீதான பற்றுதல் அதிகரித்து வருவதைக் காட்டுகிறது.

இ. ஆர். மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்வில், பேச்சுப் போட்டியில் 192 மாணவர்களும், ஓவியப் போட்டியில் 229 மாணவர்களும், கட்டுரைப் போட்டியில் 77 மாணவர்களும் என மொத்தம் 498 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு. எஸ். விஜயகுமார் பரிசுகளை வழங்கினார். அவர் மாணவர்களிடையே பேசுவையில், "பேசும் திறன், எழுதும் திறன், வரையும் திறன் ஆகிய மூன்று திறன்களும் மாணவர்களுக்கு மிக முக்கியம். இவற்றைக் கற்றுக் கொண்டால் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இந்த இன்டர்நெட் உலகிலும் மொழியையும், வரலாறையும் மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம். நம்முடைய அற இலக்கியங்களும், சட்டங்களும் பிறரிடம் அன்பாக இருக்க வேண்டும் என்பதையே போதிக்கின்றன. எனவே சக மனிதர்களுடன் அன்பாகப் பழகு வோம். 'முயற்சி திருவினை யாக்கும்' என்கிறார் வள்ளுவர். எனவே மாணவர்களும் வாழ்க்கையில் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்" என்றார். இந்நிகழ்ச்சியில், இ. ஆர். மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. எம். ஏ. ரமேஷ் குமார், ஸ்ரீராம் சிட்ஸ் திருச்சி மண்டலத்தின் முதுநிலை மண்டல மேலாளர் திரு. பி. பாலமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போட்டியில் முதல் பரிசு வென்ற மாணவர்களின் விவரம் வருமாறு : பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மாணவர்கள்: இடைநிலைப் பிரிவு: பிரா. ஹாசினி, மகரிஷி வித்யா மந்திர் பதின்ம மேல்நிலைப்பள்ளி , காரைக்குடி மேல்நிலைப் பிரிவு: ஈ. வீரமாலினி, புனித சிலுவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்சி கல்லூரிப் பிரிவு: ரா. முத்துலெட்சுமி, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மாணவர்கள்: இடைநிலைப் பிரிவு: சு. தஷ்வின், மகாத்மா காந்தி சென்டரரி வித்யாலயா மேல்நிலைப் பிரிவு: பாலாஜி ஆனந்தன், விவேகானந்தா வித்யாலயா பள்ளி கல்லூரிப் பிரிவு: பா.சஞ்சு குமார், சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற மாணவர்கள்: இடைநிலைப் பிரிவு: பி.மௌஷி விநாயக், கோல்டன் கேட்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெரம்பலூர் மேல்நிலைப் பிரிவு: கோ. ஹரிதா,புனித வின்சென்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நவலூர் கல்லூரிப் பிரிவு: ம.பிரியங்கா, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881




திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் (மஞ்சள் குடோன்) அமைந்துள்ள மாவட்ட இருப்பறையில் வைக்கப்பட்டிருந்த செயலிழந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (Non–Functional Units) மற்றும் Symbol Loading Units (SLU) கருவிகள் பெங்களூருவில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்வதற்காக வாகனத்தில் இயந்திரங்களை ஏற்றப்படுவதனை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ரவிகுமார் தலைமை யில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் முன்னிலையில் பார்வையிட்டார். உடன் தேர்தல் வட்டாட்சியர் திருமலை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## 'சேயோன்' -ல் அரசியல் தலைவர்!

சென்னை, ஆக. 12

சிவகார்த்திகேயன் நடிக்கும் 'சேயோன்' படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு தற்போது நடைபெற்று




வருகிறது. இந்நிலையில், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சீமான் ஏற்கனவே சில திரைப்படங்களில் நடித்துள்ள நிலையில், 'சேயோன்' படத்திலும் நடிப்பது குறித்து படக்குழு விரைவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.






# வேலை வாய்ப்பு

## HAL–ல் 120 பணியிடங்கள்!

Hindustan Aeronautics Limited (HAL) நிறுவனத்தில் Design Trainee, Management Trainee உள்ளிட்ட பணிகளுக்கு 120 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அறிவிப்பு எண்: HAL/CHRC–TM/RECT–02/2026
அறிவிப்பு தேதி: 29.07.2026
பணி வகை: Design Trainee / Management Trainee
காலியிடங்கள்: 120
பணி: நிரந்தர அடிப்படையில்
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 29.07.2026
கடைசி நாள்: 14.08.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன் www.hal–india.co.in

## திண்டுக்கல் மாவட்ட சுகாதாரத்துறையில் 36 பணியிடங்கள்!

திண்டுக்கல் மாவட்ட சுகாதார சங்கத்தில் (District Health Society) பல்வேறு பணிகளுக்கு 36 காலிப் பணியிடங்கள்அறிவிக்கப்பட்டுள்ளன.

பணியிடங்கள்: Audiologist & Speech Therapist, Occupational Therapist, Radiographer, OT Assistant, Mid–Level Health Provider, ANM, Siddha Doctor, Unani Doctor, Dispenser உள்ளிட்ட பல்வேறு பணிகள்
மொத்த காலியிடங்கள்: 36
பணி வகை: ஒப்பந்த அடிப்படை
பணியிடம்: திண்டுக்கல்
விண்ணப்ப தொடக்கம்: 10.08.2026
கடைசி நாள்: 21.08.2026 மாலை 5.00 மணி
விண்ணப்ப முறை: ஆஃப்லைன்

விண்ணப்பிக்கும் முன் ஒவ்வொரு பணிக்கும் தேவையான கல்வித்தகுதி, வயது வரம்பு, ஊதியம் மற்றும் அனுபவத் தகுதி ஆகியவற்றை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்க்கவும்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: dindigul.nic.in

## ஈரோடு மாவட்ட சுகாதாரத்துறையில் 19 பணியிடங்கள்!

மாவட்ட சுகாதார சங்கம், ஈரோடு (District Health Society) சார்பில் பல்வேறு பணியிடங்களுக்கு 19 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணியிடங்கள்: Special Educator, RMNCH Counsellor, Yoga & Naturopathy Doctor, Ayurveda Doctor, Siddha Doctor, Yoga Professional, Siddha Pharmacist, Therapeutic Assistant, Data Assistant, Laboratory Technician உள்ளிட்ட பணிகள்
மொத்த காலியிடங்கள்: 19
பணி வகை: ஒப்பந்த அடிப்படை
பணியிடம்: ஈரோடு
விண்ணப்ப தொடக்கம்: 07.08.2026
கடைசி நாள்: 21.08.2026
விண்ணப்ப முறை: ஆஃப்லைன்

குறிப்பு: ஒவ்வொரு பணிக்கும் கல்வித்தகுதி, வயது வரம்பு, ஊதியம் மற்றும் அனுபவத் தகுதி மாறுபடும். விண்ணப்பிக்கும் முன் அதிகாரப்பூர்வ அறிவிப்பை முழுமையாக சரிபார்க்கவும்.

அதிகாரப்பூர்வ இணையதளம்: erode.nic.in

## 242 மத்திய அரசு பணியிடங்கள்! ISRO–வில்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) சார்பில் Assistant, Upper Division Clerk (UDC), Junior Personal Assistant மற்றும் Stenographer பணிகளுக்கு 242 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சேர்ப்பு அறிவிப்பு 27.07.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. ISRO–வின் அதிகாரப்பூர்வ Current Opportunities பக்கத்திலும் இந்த அறிவிப்பு தற்போது இடம்பெற்றுள்ளது.

**முக்கிய விவரங்கள்**

நிறுவனம்: Indian Space Research Organisation (ISRO)
அறிவிப்பு எண்: ISRO:ICRB:01(A–JPA):2026
மொத்த காலியிடங்கள்: 242
பணியிடங்கள்: Assistant / UDC, Junior Personal Assistant / Stenographer
பணி வகை: நிரந்தர அடிப்படை
பணியிடங்கள்: மகேந்திரகிரி (திருநெல்வேலி), அகமதாபாத், பெங்களூரு, ஹாசன், ஹைதராபாத், புதுடெல்லி, ஸ்ரீஹரிகோட்டா, திருவனந்தபுரம்
விண்ணப்ப தொடக்கம்: 27.07.2026
கடைசி நாள்: 16.08.2026 இரவு 11.59 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன் – : https://www.isro.gov.in/

## UPSC–ல் பல்வேறு பணிகளுக்கு 41 காலியிடங்கள்!

Union Public Service Commission (UPSC) சார்பில் Advertisement No. 09/2026 மூலம் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் 41 பணியிடங்களுக்கு நேரடி ஆட்சேர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

**முக்கிய விவரங்கள்**

நிறுவனம்: Union Public Service Commission (UPSC)
அறிவிப்பு எண்: 09/2026
மொத்த காலியிடங்கள்: 41
பணியிடங்கள்: Agricultural Engineer, Medical Officer/ Research Officer (Unani), Scientist 'B', Civilian Medical Officer, Specialist Grade III Assistant Professor, Assistant Industrial Adviser, Veterinary Assistant Surgeon உள்ளிட்ட பணிகள்
பணி வகை: நிரந்தர பணி
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப தொடக்கம்: 25.07.2026
கடைசி நாள்: 14.08.2026 மாலை 6.00 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன்
தேர்வு முறை: பணிக்கு ஏற்ப நேர்முகத் தேர்வு / Recruitment Test மற்றும் நேர்முகத் தேர்வு
ஊதிய நிலை: Pay Matrix Level 7 முதல் Level 11 வரை, பணிக்கு ஏற்ப மாறுபடும்.

**யாருக்கு வாய்ப்பு?**

பொறியியல் பட்டதாரிகள், மருத்துவர்கள், அறிவியல் முதுநிலை பட்டதாரிகள், கால்நடை மருத்துவர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளில் தகுதி பெற்றவர்கள் தங்களுக்கான பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பணிக்கும் கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பு தனித்தனியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப்பூர்வ UPSC இணையதளம்: UPSC Official Website
ஆன்லைன் விண்ணப்பம்: UPSC Online Recruitment Application

# இன்றைய கார்ட்டூன்




# நாடாளுமன்றத்தில் கடும் அமளி: இரு அவைகளும் ஒத்திவைப்பு!



புதுடெல்லி,ஆக. 12–

மாநிலங்களவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஜான் பிரிட்டாஸ் எம்.பியை பா.ஜனதா எம்.பி. சுஷ்மிதா தேவ், 'லுங்கிவாலா' என்று அவமதித்ததாக எழுந்த புகாரால் கடும் அமளி ஏற்பட்டது. இதையடுத்து மாநிலங்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. மாநிலங்களவை இன்று காலை கூடியதும் வழக்கமான அலுவல்கள் நடைபெற்றன. பின்னர், தன்னை 'லுங்கிவாலா' என்று பாஜக எம்.பி அவமதித்ததாக ஜான் பிரிட்டாஸ் பிரச்சினையை எழுப்பினார்.கடந்த திங்கட்கிழமை வருமான வரி திருத்த அவசரச் சட்டத்துக்கு எதிராக சட்டப்பூர்வ தீர்மானம் கொண்டு வர முயன்றபோது, பா.ஜனதா எம்.பி. சுஷ்மிதா தேவ் தனது ஒதுக்கப்பட்ட இருக்கையில் இருந்து எழுந்து, தனக்கு பின்னால் இருந்த இருக்கைக்கு வந்து அமர்ந்து, தன்னை மீண்டும் மீண்டும் 'லுங்கிவாலா' என்று அழைத்ததாக பிரிட்டாஸ் குற்றம் சாட்டினார்.இதற்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆதரவு தெரிவித்தனர். அதே நேரத்தில், சுஷ்மிதா தேவின் விளக்கத்தைக் கேட்ட பிறகே எந்த முடிவையும் எடுக்க வேண்டும் என்று ஆளும் தரப்பு எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

இதனால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது. மாநிலங்களவை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், சம்பந்தப்பட்ட எம்.பி.க்களை தனது அறைக்கு அழைத்து பேசி பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக தெரிவித்தார்.இதற்கிடையே, நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு மற்றும் அவைத் தலைவர் ஜே.பி. நட்டா ஆகியோர் சுஷ்மிதா தேவுக்கும் பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரினர். இதையடுத்து அவர் அவைத் தலைவரிடம் பேச அனுமதி கோரி சென்றார். மறுபுறம், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரி முழக்கங்களை எழுப்பினர். அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்காக பெறப்பட்ட நன்கொடைகள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் குறித்தும் அவர்கள் முழக்கங்களை எழுப்பினர். இருதரப்பினரும் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவை தலைவர் அவை நடவடிக்கைகளை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைத்தார்.முன்னதாக, தன்னை 'லுங்கிவாலா' என்று அழைத்ததாகக் கூறி சுஷ்மிதா தேவுக்கு எதிராக ஜான் பிரிட்டாஸ் உரிமை மீறல் தீர்மானம் கொண்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களவை கூடியதும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். இதையடுத்து, அவையை சுமுகமாக நடத்த எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஓம் பிர்லா கேட்டுக்கொண்டார். ''போராட்டம் நடத்துவதும், முழக்கங்களை எழுப்புவதும் அவையின் செயல்பாடுகளை பாதிப்பதுடன், நாடாளுமன்றத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இது சரியான நடவடிக்கை அல்ல'' என்று அவர் கூறினார். மேலும், "ஆளும் தரப்பினரின் அணுகுமுறையும், உங்கள் அணுகுமுறையும் வேறுபட்டிருக்கலாம். உங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்க உங்களுக்கு முழு உரிமை உள்ளது. அதே நேரத்தில், நாடாளுமன்றம் செயல்பட வேண்டும் என்று நாடு விரும்புகிறது'' என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.ஆனால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால், அவை நடவடிக்கைகளை பிற்பகல் 2 மணி வரை சபாநாயகர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த ஜூலை 20–ந்தேதி தொடங்கியதில் இருந்து, இதுவரை ஒரு நாள் கூட கேள்வி நேரம் முழுமையாக நடைபெறவில்லை. இன்றும் கேள்வி நேரம் 3 நிமிடங்களுக்கும் குறைவாகவே நடைபெற்றது. இதன் மூலம், தொடர்ந்து 18–வது நாளாக கேள்வி நேரம் முழுமையாக நடைபெறாமல் பாதிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்களுக்கு இலங்கை கதவு திறந்தது!

கொழும்பு, ஆக. 12–

இந்தியாவில் அகதி களாக தஞ்சம் புகுந்துள்ள இலங்கை தமிழர்கள், தங்கள் சொந்த விருப்பத்துடன் தாயகம் திரும்புவதற்கான நடைமுறைகளை எளிதாக்கும் புதிய திட்டத்துக்கு, இலங்கை அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

நம் அண்டை நாடான இலங்கையில், தமிழர்களுக்காக தனி நாடு கேட்டு நீண்ட காலமாக போராட்டங்கள் நடந்து வந்தன. இது, 1983க்குப் பின், உள்நாட்டு போராக வெடித்தது. இவ்வாறு, 30 ஆண்டுகள் நீடித்த இந்த உள்நாட்டு போர், 2009 மே மாதம் முடிவுக்கு வந்தது.

உள்நாட்டு போரின்போது, ஆயிரக்கணக்கான இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்தனர்.

தமிழகத்தின் பல்வேறு முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியேயும் ஆயிரக்கணக்கான இலங்கை அகதிகள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது இலங்கை அகதி கள் தாமாக முன்வந்து, நாடு திரும்புவதை எளிதாக்கும் வகையில், புதிய குடியேற்ற விதி களுக்கு இலங்கை அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



அதன் விபரம்:

போர் காலத்தில் முறையான பயண ஆவணங்கள் இன்றி அவசரமாக நாட்டை விட்டு வெளியேறி, இந்தியாவில் அகதிகளாக பதிவு செய்தோர் மீது பதியப்பட்டிருந்த குடியேற்ற சட்ட மீறல் வழக்குகளும், சிக்கல்களும் தளர்த்தப்படுகின்றன ஐ.நா., அகதிகள் அலுவலகம் உதவியோடும், இந்தியாவில் உள்ள இலங்கை துாதரகங்கள் வாயிலாகவும், இவர்களின் உண்மையான குடியுரிமை உறுதி செய்யப்படும்

இலங்கை திரும்ப விரும்புவோர் மீது கொலை, தேசத்துரோகம் அல்லது தீவிர குற்றச்சாட்டுகள் ஏதேனும் உள்ளதா என்பது குறித்து, புலனாய்வு பிரிவு வாயிலாக தீவிர பரிசோதனை மேற்கொள்ளப்படும்

எவ்வித சட்ட சிக்கல்களும் இன்றி, அங்கீகரிக்கப்பட்ட துறைமுகங்கள் அல்லது விமான நிலையங்கள் வழியாக தற்காலிக பயண ஆவணங்கள் வாயிலாக இலங்கைக்குள் நுழைய இவர்கள் அனுமதிக்கப்படுவர்.

தீவிர குற்றச்சாட்டுகள் உள்ளோர் மட்டும் எல்லைகளிலேயே தடுத்து நிறுத்தப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்

கடந்த 2006 ஆகஸ்ட் 1க்கு முன் மற்றும் போர் முடிவுக்கு வந்த 2009 மே 19 வரையிலான காலகட்டத்தில், இந்தியாவில் குடியேறியவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் தாதன்குளம் கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# லஞ்சம் கேட்டால்... 78717 23000!




சென்னை, ஆக. 12–

சென்னை மாநகர காவல் துறையில் முதன்முறையாக ஊழல் ஒழிப்பு தனிப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. காவலர்கள் லஞ்சம் கேட்டால் பொதுமக்கள் 78717 23000 என்ற பிரத்யேக எண்ணில் புகார் அளிக்கலாம். புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். லஞ்சம் பெற்றது விசாரணையில் உறுதியானால் சம்பந்தப்பட்ட காவலர் மீது வழக்குப்பதிவு செய்து கைது நடவடிக்கை மேற்கொள்ள ப்படும் என போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் எச்சரித்துள்ளார். கூடுதல் எஸ்.பி. குமரேசன் தலைமையில் தனிப்பிரிவு செயல்படும். தேவைக்கேற்ப கூடுதல் போலீசார் நியமிக்கப்படுவர். சென்னை யில் பிரிவின் செயல்பாட்டைப் பொறுத்து, பிற மாவட்டங்களிலும் படிப்படியாக இதுபோன்ற ஊழல் ஒழிப்பு பிரிவுகள் தொடங்கப்படும் என போலீஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தொடர்ந்து உயரும் தங்கம் விலை!!




சென்னை, ஆக. 12–

தங்கத்தின் விலை இன்று உயர்ந்துள்ளது. சவரனுக்கு ரூ. 400 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 1,13,600–க்கும் கிராமுக்கு ரூ. 50 உயர்ந்து ஒரு கிராம் ரூ. 14,200–க்கும் விற்பனையாகிறது. சமீபமாக கடந்த ஆக. 4 ஆம் தேதி ஒரு சவரன் தங்கம் ரூ. 1,05,600 ஆகக் குறைந்தது குறிப்பிடத்தக்கது. வெள்ளி விலையில் மாற்றமில்லை.

ஒரு கிராம் ரூ. 260–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2,60,000–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# ஜிம்பாப்வேயில் சோகம்: ஏரியில் படகு கவிழ்ந்து 15 பேர் பலி; 27 பேர் மாயம்!



ஹராரே, ஆக. 12–

கரிபா ஏரியில் அதிக பயணிகளை ஏற்றி சென்ற படகு கவிழ்ந்ததில் 15 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. படகு கவிழ்ந்த விபத்தில் மேலும் 27 பேர் மாயமாகி உள்ளனர். இதனை அந்நாட்டின் பேரிடர் மேலாண்மை முகமை தெரிவித்துள்ளது. மேலும் அந்த ஏரியில் இருந்து 77 பேர் மீட்கப்பட்டு அங்குள்ள ஒரு தீவுக்கு கொண்டு செல்லப்பட்டதாக அந்த முகமை கூறியுள்ளது.

இருப்பினும், உறுதிப்படுத்தப்பட்ட பயணச்சீட்டு விற்பனையின் அடிப்படையில், 114 பயணிகளும், ஐந்து பணியாளர்களும் மட்டுமே படகில் இருந்ததை உறுதிப்படுத்த முடிவதாக ஜிம்பாப்வேயின் சிவில் பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.மேலும் பயணச்சீட்டு தேவைப்படாத வயதுடைய குழந்தைகள் எத்தனை பேர் படகில் இருந்தார்கள் என்பது தெரியவில்லை என்றும், அவர்கள் கணக்கில் சேர்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் படகு 90 பேர் பயணிக்கும் திறன் கொண்டதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான முட்சா முரோம்பெட்ஸி (Mut-sa Murombedzi) ஒரு காணொளியை வெளியிட்டார். அதில், பழமையானதாக தோன்றும் அந்த படகு தனது பயணத்தைத் தொடங்கியபோது, கரையில் இருந்தவர்கள் அதற்கு விடை கொடுக்கும் வகையில் கைகளை அசைப்பது பதிவாகியுள்ளது. கிராமப்புற மக்கள் கரிபா நகரத்திற்கு செல்ல ஏரி வழியாக இந்தப் படகை பயன்படுத்துவதாக அவர் கூறினார். ஏரியில் வீசும் பலமான அலைகளை அந்த படகு தாங்குமா என்பது குறித்து கரையில் நின்றிருந்த சிலர் கவலை தெரிவித்ததையும் அந்த காணொளி காட்டுகிறது.

முன்னதாக, மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாக ஜிம்பாப்வே காவல்துறை தெரிவித்திருந்தது, ஆனால் வேறு எந்த விவரங்களையும் அவர்கள் வழங்கவில்லை.

# கடலை நோக்கி ஏவுகணை சோதனை நடத்திய வட கொரியா!



வடகொரியா, ஆக. 12–

கடலை நோக்கி வட கொரியா ஏவுகணை சோதனை நடத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஒரு வாரத்திற்கும் குறைவான காலத்தில் நிகழும் இரண்டாவது ஆயுத சோதனையாக இந்த சம்பவம் அரங்கேறி இருக்கிறது. வட கொரியா புதன்கிழமை கடலை நோக்கி பாலிஸ்டிக் ஏவுகணை ஒன்றை ஏவியதாக ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆயுதம் கடலில் விழுந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. தென் கொரிய ராணுவத்தை மேற்கோள் காட்டி, வட கொரியா தனது கிழக்கு கடற்கரைக்கு அப்பால் அடையாளம் தெரியாத ஏவுகணை ஒன்றை சுட்டதாக யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வட கொரிய அச்சுறுத்தல்களுக்கு எதிரான தயார்நிலையை வலுப்படுத்துவதற்காக, தென் கொரியாவும் அமெரிக்காவும் அடுத்த வாரம் தங்களின் வருடாந்திர பெரிய அளவிலான இராணுவ பயிற்சிகளை தொடங்கவுள்ளதாக அறிவித்த இரண்டு நாட்களுக்கு பிறகு, இந்த ஏவுகணை சோதனை நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உல்ச்சி ஃப்ரீடம் ஷீல்ட் என்று அழைக்கப்படும் இந்தப் பயிற்சிகள், வட கொரியாவிடம் இருந்து கடும் எதிர்ப்பை தூண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில், தம்மீது படையெடுப்பதற்கான ஒரு ஒத்திகையாகவே அந்நாடு இந்த பயிற்சியை கருதுகிறது.

இதற்கு முன்னர், தென் கொரியா – அமெரிக்காவின் முக்கிய இராணுவப் பயிற்சிகளுக்கு, வட கொரியா ஆத்திரமூட்டும் ஆயுத சோதனைகள் மற்றும் கடுமையான சொல்லாடல்கள் மூலம் பதிலளித்துள்ளது.

கடந்த வாரம், தென் கொரியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள், வட கொரியா ஏவிய குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணையை கண்டறிந்தன. இது ஜூன் மாத கடைசிக்கு பிறகு வட கொரியா மேற்கொண்ட முதல் பாலிஸ்டிக் ஆயுத சோதனை நடவடிக்கையாகும். வழக்கமாக ஆயுத சோதனைகள் குறித்த விவரங்களை ஒரு நாள் கழித்து வெளியிடும் வட கொரியா, இந்த ஏவுகணை ஏவப்பட்டதாகக் கூறப்படுவதை உறுதிப்படுத்தவில்லை.

# இளைஞர்களின் வேலை இல்லாதோர் விகிதம் 15.9 சதவீதமாக அதிகரிப்பு!



சென்னை, ஆக. 12–

நாட்டில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கான வேலை இல்லாதோர் விகிதம் கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 5.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஒரு ஆண்டில் இல்லாத அளவுக்கு இது அதிகமாகும். மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் கூறியிருப்பதாவது:–

கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் வேலை இல்லாதோர் விகிதம் 5 சதவீதமாக இருந்தது. தற்போது அது 5.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல்–ஜூன் காலாண்டிலும் இதே அளவான 5.4 சதவீதம் பதிவாகி இருந்தது. கிராமப்புறங்களில் வேலை இல்லாதோர் விகிதம் 4.3 சதவீதத்தில் இருந்து 4.8 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் 6.6 சதவீதத்தில் இருந்து 6.7 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. பெண்களுக்கான வேலை இல்லாதோர் விகிதம் 5.3 சதவீதத்தில் இருந்து 5.7 சதவீதமாகவும், ஆண்களுக்கான விகிதம் 4.8 சதவீதத்தில் இருந்து 5.3 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. 15 முதல் 29 வயது வரையிலான இளைஞர்களின் வேலை இல்லாதோர் விகிதம் 15 சதவீதத்தில் இருந்து 15.9 சதவீதமாக உயர்ந்துள்ளது. கிராமப்புற இளைஞர்களிடம் இது 13.5 சதவீதத்தில் இருந்து 14.7 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் 18.2 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

இளம் பெண்களிடம் வேலை இல்லாதோர் விகிதம் 19.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதற்கு முந்தைய காலாண்டில் இது 17.7 சதவீதமாக இருந்தது. இதுவே இதுவரை பதிவான காலாண்டு புள்ளிவிவரங்களில் இளம் பெண்களுக்கான அதிகபட்ச வேலை இல்லாதோர் விகிதமாகும். வேலை செய்து கொண்டிருப்பவர்கள் அல்லது வேலை தேடுபவர்களின் எண்ணிக்கையை குறிக்கும் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 55.5 சதவீதத்தில் இருந்து 54.6 சதவீதமாக குறைந்துள்ளது. பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் ஜூன் மாதத்தில் 32.7 சதவீதமாக குறைந்துள்ளது. இது ஒரு ஆண்டில் பதிவான குறைந்த அளவாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நிலவில் நிரந்தர வசிப்பிடம்: இஸ்ரோவுக்கு நாசா அழைப்பு!



நிலவின் தென்துருவத்துக்கு அருகே மனிதர்களுக்கான முதல் வசிப்பிடத்தை அமைக்கும் தனது லட்சியத் திட்டத்தில் இணைய இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவுக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா' அழைப்பு விடுத்துள்ளது.

'நிலவு ஆராய்ச்சித் தள திட்டம் (மூன் பேஸ் மிஷன்)' என்ற பெயரிலான இந்தத் திட்டத்தின் கீழ், விண்வெளி வீரர்கள் நீண்ட காலம் தங்கி ஆய்வுகள் மற்றும் பிற பணிகளை மேற்கொள்ள வசதியாக நிலவின் தென் துருவத்துக்கு அருகே நிரந்தர வசிப்பிடத்தை அமைக்க நாசா திட்டமிட்டுள்ளது. புதிய விண்வெளிக் கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதும், எதிர்கால தீவிர விண்வெளி ஆய்வுகளுக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வதும் இதன் நோக்கமாகும் என்றும் நாசா தெரிவித்துள்ளது. இந்த நிலையில், பெங்களூரில் அண்மையில் நடைபெற்ற இந்தியா – அமெரிக்கா கூட்டு விண்வெளி ஆய்வுப் பணிக் குழு (சிஎஸ்ஜேடபிள்யுஜி) கூட்டத்தில், இரு நாடுகளிடையேயான விண்வெளி ஆராய்ச்சி ஒத்துழைப்பை விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டது. அப்போது, தனது நிலவு ஆராய்ச்சித் தள திட்டத்தில் இணைய இஸ்ரோவுக்கு நாசா அழைப்பு விடுத்தது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது: அமைதியான முறையில் விண்வெளி ஆய்வை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட ஆர்ட்டெமிஸ் உடன்படிக்கையின் கீழ் இரு நாடுகள் கூட்டுறவுடன் நிலவு ஆராய்ச்சித் தள திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோவுக்கு நாசா சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் கீழ், வெளிப்படையான விஞ்ஞான தரவுப் பகிர்வு ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தையை அடுத்தகட்டத்துக்கு கொண்டு செல்லவும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பாதுகாப்புத் துறையில் வளர்ந்துவரும் முக்கியத் தொழில்நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர், குவாண்டம், உயிரி தொழில்நுட்பம், எரிசக்தி, விண்வெளி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த கடந்த ஆண்டு பிப்ரவரியில் மேற்கொள்ளப்பட்ட 'வியூக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா – இந்தியா இடையேயான உறவை மேம்படுத்துதல் (டிரஸ்ட்)' உடன்படிக்கையின் கீழ், இரு நாடுகளிடையே விண்வெளி ஆராய்ச்சி ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020